# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## S.T.C.No. 304/2024

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Pw1 |
| Name | : Kanniyappan |
| Father/Husband's Name | : Ezhumalai |
| Taluk | : Guduvancherry |
| Calling | : |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.04.2026.

**குறுக்கு விசாரணை**

1. பிருந்தா தேவி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது வீட்டு பக்கத்தில் வாடகைக்கு இருந்தார். அவரை எனக்கு ஐந்து ஆறு வருடங்களாக தெரியும். எனது புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் எந்தெந்த தேதிகளில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். அதை யார் முன்னிலையில் கொடுத்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எவ்வாறு மற்றும் எந்த முறையில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை

என்றால் சொல்லவில்லை. ஆனால் பணமாக கொடுத்தேன். 2023ம் காலகட்டத்தில் Aluminium Frabrication தொழில் செய்து வருகிறேன். எனது மாத வருமானம் ரூ.50,000/— முதல் ரூ.60,000/— ஆகும்.

2. நான் தற்போது வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். எந்த தேதியில் எதிரி எனக்கு காசோலை கொடுத்தார் என்றால் 09.12.2023 அல்லது 10.12.2023 ம் தேதி காசோலை கொடுத்தார். நான் வங்கியில் செலுத்துவதற்கு ஒரு வாரம் முன்னதாக காசோலை கொடுத்தார். அந்த காசோலை எண். 2, இந்தியன் ஓவர்சிஸ் வங்கி. எனது பிரமாண வாக்குமூலத்தில் 18.12.2023ல் தான் காசோலை கொடுத்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் 18.12.2023ல் அவர் கொடுத்த காசோலையை வங்கியில் செலுத்தும்படி சொன்னார். அந்த விசயத்தை எனது புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிரியிடம் பணம் கேட்ட போது என்னை குண்டர்களை ஏவி கொலை செய்து விடுவேன் என்று சொல்லப்படும் சம்பவத்தை குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஓட்டேரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்ற போது காசோலை கொடுத்தார்களா என்று விசாரித்து நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார்கள்.

3. இந்த விவரத்தை புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும், வழக்கறிஞர் அறிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது தான் இதை பற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எந்த தேதியில் என்னை மிரட்டினார்கள் என்ற விவரத்தை புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எவ்வாறு மிரட்டினார்கள் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் வங்கியில் இருந்து காசோலை திருப்பப்பட்டது என்றால் 19.12.2023 ம் தேதி ஆகும். நான் எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் முதல் முறை அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தேதி ஞாபகம் இல்லை. இரண்டாம் முறை 11.01.2024 ம் தேதி தபால் மூலமாக அனுப்பப்பட்டது.

4. முதல் முறை அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு எந்த பதிலும் இல்லாததால் இரண்டாம் முறை அனுப்பப்பட்டது. **மதசா.ஆ.3** முதல் முறை அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு. இரண்டாவது முறை அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ஏன் தாக்கல் செய்யவில்லை என்று என் வழக்கறிஞருக்குத் தான் தெரியும். 19.12.2023 ம் தேதி காசோலை திருப்பப்பட்டது. 08.02.2024 ம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். காசோலை திரும்ப பெற்றதில் இருந்து

53 நாட்கள் காலதாமதமாக தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 8 நாட்கள் கால தாமதமாக புகாரை தாக்கல் செய்தது குறித்து எந்த காரணத்தையும் நீதிமன்றத்தில் நான் சொல்லவில்லை என்றால் அதை பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. காலதாமத மனு ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது வருமான வரியை நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

5. கடந்த 2 ஆண்டுகளாக தான் வருமான வரி தாக்கல் செய்திருக்கிறேன். நான் நடத்தி வரும் தொழிலின் கடை ஓனர் நான் தான். நான் தான் அந்த கடையின் உரிமையாளர் என்பதை குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.